# 8

# "மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர்"

## (1:9–17, 20)

பாபிலோனில் தானியேல் ஒரு முதிர் வயதான மனிதராய் இருந்த போது, ஒரு இரவு வேளையில் அவர் ஒரு தரிசனம் கண்டார். "நீண்ட ஆயுசுள்ளவர்" (தானியேல் 7:9) பயங்கரமான நான்கு மிருகங்களுக்கு நியாயத்தீர்ப்பு வழங்குவதையும் பின்பு "மனுஷகுமாரனுடைய சாயலான" ஒருவரையும் கண்டார். பிற்பாடு அவர் பின்வருமாறு எழுதினார்:

> இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்து வமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும் (தானியேல் 7:13, 14).[1]

தானியேல் "மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவரை" கண்டபோது, அவர் கலக்கம் அடைந்து எச்சரிக்கை உணர்வு பெற்றார் (தானியேல் 7:15). அறுநூறு ஆண்டுகளுக்குப் பின்பு, ஏஜியன் கடலில் இருந்த ஒரு சிறிய தீவில், இன்னொரு வயது முதிர்ந்த மனிதர், "மனுஷகுமாரனுக்கொப்பானவரை"க் கண்டார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:13)[2]; அதை அவர் கண்டபோது, அவர் "செத்தவனைப் போல அவருடைய பாதத்தில்" விழுந்தார் (1:17). இந்த "மனுஷகுமாரன்" யார்? அவர் தம்மைக் கண்ணோக்குகின்றவர்கள் மீது இவ்விதமான செயல் விளைவு கொண்டிருப்பது ஏன்?

இந்தப் பாடத்தில் நாம், வெளிப்படுத்தின விசேஷம் 1:9-20 பற்றிய படிப்பு ஒன்றைத் துவக்குவோம். இவ்வசனங்களில் யோவான், எழுதுவதற்குத் தாம் பெற்ற கட்டளைகளைப் பற்றிக் கூறியுள்ளார், ஆனால் இன்னும் அதிகமானவற்றையும் அவர் செய்தார். அவர் தமக்குக் கிடைத்த முதல் தரிசனத்தை விவரித்தார்: "மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவரின்" தரிசனம். அந்தத் தரிசனம் இந்தப் புத்தகத்தின் எஞ்சிய பகுதிக்கான மேடையை அமைக்கிறது. நாம் வெளிப்படுத்தின விசேஷத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், தானியேல் மற்றும்

யோவான் ஆகியோரால் சித்தரிக்கப்பட்ட ஒருவரைக் குறித்து நாம் அறிய வேண்டும். வெளிப்படுத்தின விசேஷத்தின் செய்தியினால் நாம் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்றால், நாமும்கூட அவருக்கு முன்பாகக் கீழே விழ வேண்டும்.

## யோவான் கேள்விப்பட்டது என்ன (1:9-11)

யோவான் பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்கினார்: "உங்கள் சகோதரனு ... மாயிருக்கிற யோவானாகிய நான்" (வசனம் 9). அவர் தமது அப்போஸ்தலத்துவத்தையோ அல்லது அதிகாரத்தையோ தமது வாசகர்களுக்கு நினைவூட்டவில்லை; அவர் தம்மை அவர்களின் சகோதரன் என்று மட்டும் அடையாளப்படுத்தினார்

அவர் தம்மை, "இயேசுகிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன்பங்காளனுமாயிருக்கிற" என்று குறிப்பிட்டுக் கொண்டார் (வசனம் 9). "உடன்பங்காளன்" என்பது "பகிர்ந்து கொள்கிற" அல்லது "பொதுவில் கொண்டுள்ள'' என்று அர்த்தப்படும் கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது. யோவான் தமது வாசகர்களுடன் பின்வரும் மூன்று வழிகளில் ''உடன் பங்காளராக'' இருந்தார்: உபத்திரவத்தில், இராஜ்யத்தில் மற்றும் பொறுமையில். "வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள இந்த மூன்று முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வுக்கருத்துக்கள்"[3] முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் பிரிக்க இயலாதவைகளாக இருந்தன.

*உபத்திரவம்* என்பது கிறிஸ்தவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த வற்றைக் குறித்தது. ''உபத்திரவம்'' என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது மூலத்தில், "அமுத்தம்'' என்பதை மாத்திரம் அர்த்தப் படுத்திற்று, ஆனால் புதிய ஏற்பாட்டில் இது "உபத்திரவமாக உள்ள நிகழ்ச்சி களின் அமுத்தம்"[4] என்று விவரிக்க வந்தது.

கிறிஸ்தவர்கள் *இராஜ்யத்திற்குள்* இருந்த காரணத்தினால் உபத்திரவப் படுத்தப் பட்டனர். தானியேல் தீர்க்கதரிசனத்தில், மனுஷகுமாரனுக்கு ஒப்பானவருடைய ஒருவரிடத்தில் இராஜ்யம் கையளிக்கப்பட்டது. அந்தத் தீர்க்கதரிசனம், இயேசு தேவன் இருக்கும் இடத்திற்கு ஏறிச்சென்று "தேவனு டைய வலது பாரிசத்தில்'' அமர்ந்தபோது நிறைவேற்றம் அடைந்தது (நடபடிகள் 2:32-36). பின்பு இயேசு பூமியில் தமது இராஜ்யத்தை நிலைநாட்டுவதற்காகப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார் (நடபடிகள் 2:1-4; நடபடிகள் 1:6-8ஐக் காணவும்). அந்த இராஜ்யம் சபை என்று அறியப்பட்டது (மத்தேயு 16:18, 19), மற்றும் யோவானும் அவரது வாசகர்களும் அதில் உடன்பங்காளர்களாக இருந்தனர் (1:6, 11).[5] பேரரசர் டொமீஷியன் மீதல்ல, ஆனால் ராஜாவான இயேசுவுக்கே அவர்கள் பற்றுறுதியைக் காண்பித்தனர், எனவே உபத்திரவம் என்பது இயல்பான விளைவாக இருந்தது (யோவான் 16:33; நடபடிகள் 14:19).

இராஜ்யத்தில் இருந்தவர்களுக்குப் *பொறுமை*[6] அவசியமாய் இருந்தது

- இது அவர்களின் இடர்ப்பாடுகளின் மத்தியிலும் அவர்கள் உறுதியாய் நிலைத்திருக்கக் கூடிய திறனாக இருந்தது (வெளிப்படுத்தின விசேஷம் 14:12; மத்தேயு 24:13; 2 தீமோத்தேயு 2:12). அவர்கள் ''உடன் பங்காளர்களாய்'' இருந்தனர் என்ற உண்மையானது அவர்கள் பொறுமையுடன் இருக்க அவர்களுக்கு உதவும்; சுமைகள் என்பவை பகிர்ந்து கொள்ளப்படும்போது இலகுவாகின்றன. அவர்கள் "இயேசுவுக்குள்" இருந்தனர் என்ற உண்மையும் அவர்களுக்கு உதவும். "இயேசுவுக்குள்" என்ற சொற்றொடர், இயேசுவுடன் கிறிஸ்தவர்களுக்கு உள்ள விசேஷித்த உறவைக் குறிப்பதற்குப் புதிய ஏற்பாடு முழுவதிலும் பயன்படுத்தப் படுகிறது (ரோமர் 16:3; 1 கொரிந்தியர் 1:2). யோவானுடைய வாசகர்கள் இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருந்தனர் (கலாத்தியர் 3:26-28), மற்றும் அவருக்குள் அவர்கள் தொடர்ந்து செல்வதற்குப் பலத்தைக் கண்டறிய முடிந்திருந்தது.

பின்பு, யோவான் எழுதுவதற்குத் தாம் கட்டளையை எங்கு இருக்கும் போது பெற்றுக்கொண்டார் என்பதைப் பௌதீகரீதியாகக் கூறினார்: அவர் "தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித் தமும், பத்மு என்னும் தீவிலே" இருந்தார்[7] (வசனம் 9இ). பத்மு என்பது ''தனிமையான, காற்றினால் அலைக்கழிக்கப்பட்ட''[8] ரோமச் சிறைச் சாலையாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு தீவாக இருந்தது.

யோவான் தேவனுடைய வசனத்தைத் தைரியமாய்ப் பிரசங்கித்திருந் ததாலும், இயேசுவைப் பற்றிய தமது சாட்சியத்தை நிறுத்திவிட மறுத்த தாலும், அந்த இடத்திற்கு அவர் நாடுகடத்தப் பட்டிருந்தார்.[9] அவரை வாயடைப்பதற்காக ரோம அரசு பத்மு தீவிற்கு அவரை அனுப்பி வைத்திருந் தது, ஆனால் அவருக்குக் கர்த்தர் மறுவலிவூட்டப்பட்ட குரலைக் கொடுக்க விருந்தார். (பக்கம் 148 காணவும்.)

பின்பு யோவான், மிக முக்கியமான - எழுதும்படி அவருக்குக் கூறப்பட்டிருந்தபோது அவர் ஆவிக்குரிய நிலையில் எங்கிருந்தார் என்பது பற்றிய - உண்மையொன்றைப் பகிர்ந்துகொண்டார்: "கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்" (வசனம் 10அ). முதலில் "கர்த்தருடைய நாளில்"[10] என்ற சொற்றொடரைக் கண்ணோக்குங்கள். "கர்த்தருடைய" என்று மொழி பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை "கர்த்தருக்குரிய" ஏதோ சிலவற்றைக் குறிப்பிடும் சிறப்பான வழிமுறையாக உள்ளது.[11] இவ்வார்த்தை புதிய ஏற்பாட்டில், இவ்விடத்திலும் 1 கொரிந்தியர் 11:20ல் "கர்த்தருடைய இராப் போஜனத்தைப்" பற்றிப் பேசும் இடத்திலும் ஆகிய இருமுறை மாத்திரமே காணப்படுகிறது. சபையின் தொடக்க காலங்களில் இருந்தே,[12] "கர்த்தருடைய நாள்" என்ற சொற்றொடர், வாரத்தின் முதல் நாளைக் குறிப்பிடுவதற்கென்றே பயன்படுத்தப்பட்டது மற்றும் இது வாரத்தின் முதல் நாளைக் குறிப்பிடுவதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டது[13] - இது இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்த நாளாக உள்ளது (மத்தேயு 28:1; லூக்கா 24:1). இன்றைய நாட்களில் நாம் கர்த்தருடைய நாளில் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்கின்றோம் (நடபடிகள் 20:7).

அடுத்ததாக, "ஆவிக்குள்ளானேன்" என்ற சொற்றொடரைக் கண்ணோக்குங்கள். 4:2லும் இதே சொற்றொடர் பயன்படுத்தப் பட்டுள்ளது. இரண்டு இடங்களிலும், "நான் ஆவிக்குள்ளாக இருக்கும்படி வந்தேன்" என்பது நேரடி மொழிபெயர்ப்பாக இருக்கும். 4:2ல் "ஆவிக்குள்ளாக இருக்கும்படி" வருதல் என்பது யோவானின் ஆவி பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள வருவதைக் குறிப்பிடுகிறது,[14] 1:10லும் அனேகமாக இதுவே அர்த்தமாகியிருக்க வேண்டும்.[15] "கர்த்தருடைய நாளில்" யோவானின் சூழ்நிலையில் ஏதோ ஒன்று அவரைக் கர்த்தரின் வெளிப்படுத்துதலைப் பெற்றுக்கொள்ளத் தயாராக ஆக்கியிருக்க வேண்டும்.[16] கர்த்தருடைய நாள் என்பது ஆராதனையின் நாளாக இருப்பதால், அந்த "ஏதோ ஒன்று" என்பது அனேகமாக, யோவானின் ஆராதனை அனுபவமாக இருந்திருக்கலாம். இதை நான் எனது சிந்தையில் பின்வருமாறு சித்தரிக்கின்றேன்.

யோவான் கடந்த அறுபது ஆண்டுகளாகத் தமது வாழ்வில் செய்திருந்ததுபோலவே, வாரத்தின் அந்த முதல் நாளிலும் அதிகாலையில் எழுந்தார். சூரியன் உதயமானபோது, அவர் ஏற்கனவே ஒரு பாறைச் சிதிலத்தின்மீது அமர்ந்துகொண்டு, கிழக்கில் இருந்த நீலநிறத் தண்ணீரின் குறுக்கே கண்ணோக்கிக் கொண்டிருந்தார். அந்தப் பாறையின் கீழே, அலைகள் ஓய்வின்றி அடிக்கையில் அவரது முகத்தில் தண்ணீர்த் திவலைகள் தெறித்துக் கொண்டிருந்தன, ஆனால் அவரது சிந்தனைகள், அவரது சகோதரர்கள் ஆராதனைக்காகக் கூடிய இடமான கடலுக்கு அப்பால் உள்ள பகுதியில் இருந்தன. அவர் அன்புகூர்ந்திருந்த முகங்களை அவர் தியானித்துப் பார்க்கையில் அவரது கண்களில் இருந்து கண்ணீர் உருண்டோடி வந்தது. அவர்கள் ஜெபிப்பதை, அப்பம் பிடுவதை, பாடுவதை அவரால் (மனக்கண்களில்) காண முடிந்தது. அங்கு அவர் தமது தனிமையான அமர்விடத்தில், வயது முதிர்ந்த உடைந்துபோன ஆனால் உணர்வு நிறைந்த தமது சொந்தக் குரலை உயர்த்தினார்: "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக" (வசனம் 6).

திடீரென்று, அவரது பாதத்தின்கீழ் இருந்த பூமியானது மூழ்கிப் புறம்பே செல்லுவதுபோல் காணப்பட்டது. தொலைவானம்/அடிவானம் பின்சென்றது. யோவானின் ஆத்துமா, காலம் மற்றும் வெளி ஆகியவற்றின் பிடிகளில் இருந்து விடுதலையாகி இருந்ததாகக் காணப்பட்டது. அவர் தம்மைச் சுற்றிலும் இருந்த இயல்பான உலகத்துடன் தொடர்பின்றி இருந்தார். அவர் "ஆவிக்குள்ளானார்." அவர் *கண்டார்*, ஆனால் உடல் ரீதியான கண்களைக் கொண்டு காணவில்லை. அவர் தமது இரட்சகருடன் நேரடியான, ஆவிக்குரிய தொடர்பில் இருந்தார்.[17]

பின்பு யோவானுக்குப் பின்னால் எழுந்த ஒரு உரத்த குரலினால் அவரது கவனம் பிடிக்கப்பட்டது, அது "எக்காளசத்தம்போன்ற[18] பெரிதான," தெளிவான கட்டளையிடும் குரலாக இருந்தது (வசனம் 10ஆ).[19]

அந்தக் குரலானது, "நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில்[20] எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு"[21] என்று கூறியது[22] (வசனம் 11). எபேசுவில் இருந்த சபையானது இருபது ஆண்டுகளுக்கும் அதிகமாக யோவான் ஆராதித்து வந்த சபைக்குழுமமாக இருந்தது, இங்கு குறிப்பிடப்பட்டிருந்த மற்ற இடங்களில் இருந்த சகோதரர்களையும் அவர் அறிந்திருந்தார்.

## யோவான் கண்டது என்ன (1:12-16, 20)

இந்த அறிவிப்பைப் பற்றிய ஏதோ ஒன்று, இந்த அப்போஸ்தலருக்கு, அவர் பல ஆண்டுகளாகக் கேட்டிராத குரல் ஒன்றை நினைவூட்டிற்று. யோவான், "அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன்"[23] என்று கூறினார் (வசனம் 12அ). அவர் திரும்பினபோது, தாம் கடந்த அறுபது ஆண்டுகளில் கண்டிராத ஒரு நண்பரை உணர்ந்தறிந்தார், ஆனால் அவரைத் தாம் முன் ஒருபோதும் கண்டிருந்திராத வகையில் கண்டார்:

> திரும்பினபோது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும்,[24] அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன். அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப்போலவும் வெண்மையாயிருந்தது; அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தது; அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது, அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப் போலிருந்தது. தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார், அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது: அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது (வசனங்கள் 12ஆ-16). (பக்கம் 149 காணவும்.)

அகன்ற விழிகளுடன் யோவான், இயேசுவை அவரது மகிமை யாவற்றிலும்[25] உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார், இவரை தானியேல் "மனுஷகுமாரனுடைய சாயலுக்கொப்பானவர்" என்று மாத்திரம் அறிந்திருந்தார்!

ஒவ்வொரு தரிசனத்திற்கும் நாம் வருகையில், முழுச் செய்தியையும் கண்டறியும் வகையில் நாம் அந்தத் தரிசனத்தைக் கண்ணோக்க முயற்சி செய்வோம் என்று நான் முன்பே கூறியிருந்தேன். பின்பு நாம், அதன் விபரங்கள் அந்தச் செய்தியை எவ்வாறு உயர்த்துகின்றன என்பதைக் காண்பதற்காக அவ்விபரங்களை ஆய்வுசெய்வோம். கடைசியாக, தரிசனத்தின் முக்கிய/பிரதான வலியுறுத்தத்தை நாம் தவறவிடாதபடிக்கு, அதை நாம் மீண்டுமாக அதன் நித்தியத்துவத்தில் கண்ணோக்குவோம்.[26] அந்தச் செய்முறையை நாம் இப்புத்தகத்தின் இந்த முதல் தரிசனத்தில் பின்பற்றுவோம்.

நாம் இந்தத் தரிசனத்தையும் இதைத் தொடர்ந்து வந்த தரிசனங்களையும் சித்தரிக்க முயற்சி செய்கையில், இவைகள் உண்மை நிலைகள் அல்ல, ஆனால் தரிசனங்கள்தாம் என்பதை நினைவில் வையுங்கள். யோவான் நன்கு விழித்திருந்தார், ஆனால் அவர் கண்ட தரிசனத்தில் இன்னமும் கனவுபோன்ற ஒரு தன்மை இருந்தது: உருவங்கள் இடம் பெயர்ந்து மாறுகின்றன; சீர்த்தன்மை என்பது அடிக்கடி பொருத்தமற்றதாக உள்ளது; நிகழ்தகவற்றதன்மைகள் என்பவை விதிவிலக்காக இன்றி விதியாகின்றன.[27] எடுத்துக்காட்டாக, இயேசு தமது கரங்களில் ஏழு நட்சத்திரங்களை எப்படி ஏந்திக் கொண்டிருக்க முடிந்தது (1:16; 2:1)? நமது சூரியனைப் போன்றே நட்சத்திரங்களும் எரியும் வாயுக்களால் ஆனவைகளாக உள்ளன, எல்லா நட்சத்திரங்களுமே நமது சூரியனைப் போன்று பெரியதாக அல்லது அதைவிடவும் பெரியதாக உள்ளன! மேலும், இயேசு தமது வலது கரத்தில் நட்சத்திரங்களை ஏந்தியபடியே, அதை யோவான்மீது வைக்க முடிந்தது எப்படி (1:17)? இந்தக் கேள்விகளுக்குப் பதில் எதுவும் இல்லை - மேலும் இவற்றைக் குறித்து கருத்து எதுவும் இல்லை. தரிசனத்தில் எதுவுமே சாத்தியமாக உள்ளது.

வெளிப்படுத்தின விசேஷத்தை நான் போதிக்கும்போது, மாணவர்கள் அந்தத் தரிசனத்தை முழுமையாகக் கண்ணோக்கி அதன் விபரங்களை ஆராய்வதற்காக, ஒவ்வொரு தரிசனத்தைக் குறித்தும் தோராயமான சித்திரம் ஒன்றை வரைவது எனது வழக்கமாக உள்ளது. அதேவேளையில் நான், உயிர்வாழ்ந்துள்ள எந்த ஒரு சித்திரக் கலைஞரும், சுண்ணக்கட்டியைக் கொண்டு கரும்பலகையின்மீதோ, மையைக் கொண்டு தாளின்மீதோ அல்லது வண்ணக் குழம்பைக் கொண்டு திரையின்மீதோ, வெளிப்படுத்தின விசேஷத்தின் தரிசனங்களைப் படமாக வரைந்து கொண்டு வந்து விடுவதில்லை என்பதையும் வலியுறுத்துவதுண்டு. யோவானுக்குக் கிடைத்த தரிசனங்களைப் பற்றி நாம் கலந்துரையாடுகையில், அவற்றின் விபரங்களையல்ல ஆனால் அவற்றின் சாராம்சத்தைக் கொண்டுவரவே விரும்புகின்றோம். நாம் இந்த முதல் தரிசனத்தை ஆழ்ந்து சிந்திப்போம்.

**முழுமையான வகையில் தரிசனம்**

யோவான் திரும்பியபோது, முதலில் அவர் தாம் கண்ட தரிசனத்தின் மகிமையினாலும், பிரகாசமான, ஏறக்குறைய கண்களைப் பார்வையற்றுப் போகச் செய்யும் ஒளியினாலும் மூழ்கடிக்கப்பட்டவரானார். அவரது கண்கள் அனுசரித்துப் போனபோது, அவர் வெளிச்சங்களின் வட்டத்தைக் காண முடிந்தது: தூயபொன்னினால் செய்யப்பட்ட நேர்த்தியான ஏழு விளக்குத்தண்டுகளின்மீது விளக்கின் ஒளிகள் பளிச்சிடுவதை அவர் காண முடிந்தது. பின்பு யோவான், அந்த விளக்குகளினூடே ஒரு உருவம் நடந்து வருவதைக் கண்டார்,[28] அவரது தோற்றம் யோவானை நடுநடுங்கச் செய்தது. இவர் அரசர்களின் நிலையங்கியை அணிந்து, "மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்தார்" (1:13). வெளியே நீட்டப்பட்ட உள்ளங்கையில் பளிச்சிடும் ஏழு நட்சத்திரங்கள் இருந்தன. அவரது பாதங்களை யோவான் சற்றே நோக்கினார்: அவைகள் ''உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான''

வெண்கலம்போல் தகதகத்துக் கொண்டிருந்தன.[29] அம்மனிதர் நடந்த இடங்களில் எல்லாம், அவர் உருக்கிவிட்டது போன்ற பாதச்சுவடுகளை விட்டுச் சென்றார்.

இருப்பினும் யோவானின் கண்கள், அந்த மனிதரின் முகத்தின்மீது கவனம் செலுத்தின. அவரது முடியானது, பிரகாசமான சூரிய ஒளியில் பனியைப் போல் பளபளத்தது, அது யோவானின் கண்களை கூசச் செய்வதுபோல் இருந்தது. அம்மனிதர் யோவானை உற்றுநோக்கினார், "அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தது" (AB). அவர் யோவானை வெறுமனே உற்றுநோக்கவில்லை; அவர் யோவானுக்குள் கண்ணோக்கினார்! அவர் தமது உதடுகளைத் திறந்தபோது. அவரது குரல், "கரைக்கு எதிராக மோதும் அலைகள் போல் முழக்கமிட்டது" (LB). பின்பு, அவரது வாயிலிருந்து, இருபுறமும் கருக்குள்ள ஒரு பெரிய திரேசியன் பட்டயம் புறப்பட்டது.[30] அந்த மனிதரின் முகம் திடீரென்று, நண்பகலில் சூரியனைப் போல் பிரகாசித்தது - யோவான் தமது கண்களைப் புறம்பே திருப்பிக்கொள்ள வேண்டியதாக இருந்தது.

அந்தக் காட்சியில் இருந்து நீங்கள் பெற்ற மனப்பதிவு என்ன? நான் உங்களுக்கு எனது மனப்பதிவுகளைக் கொடுப்பதற்கு முன்பு, உங்கள் சொந்த மறுசெய்கைகளைப் பற்றி நினைப்பதற்குச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். வசனங்கள் 12 முதல் 16 வரையுள்ள பகுதிக்குத் திரும்பச் சென்று அதை மீண்டும் வாசியுங்கள், பின்பு இந்தக் காட்சி பற்றிய எனது பதிப்பை மறுபடியும் வாசியுங்கள்.

நீங்கள் அதைச் செய்துவிட்டீர்களா? இந்தத் தரிசனத்தைப் பற்றி நீங்கள் நினைக்கையில் உங்கள் சிந்தைக்கு வரும் வார்த்தைகள் என்ன? மகிமை? மகத்துவம்? பரிசுத்தம்? இவைகளும் இவைபோன்ற வார்த்தைகளும் ஏற்புடையவைகளாகவே உள்ளன. "அதிகாரம்" (power)[31] என்ற வார்த்தை உங்கள் சிந்தைக்கு வந்ததா? என்னைப் பொறுத்தமட்டில், இந்த விபரங்கள், "இது மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர் அதிகாரம் நிறைந்தவராக இருக்கின்றார்!" என்று உரத்துக் கூறுகின்றன. அவரது உடை, அவர் ஆட்சி செய்ய அதிகாரம் கொண்டுள்ளார் என்று அறிவிக்கிறது. அவரது இடிமுழக்கம் போன்ற குரல், அவர் கட்டளையிடுவதற்கு அதிகாரம் கொண்டுள்ளார் என்று கூறுகிறது. தீப்பிழம்பான அவரது கண்கள், அவர் அறிவதற்கு அதிகாரம் கொண்டுள்ளார் என்று எடுத்துரைக்கின்றன. அவரது தகதகக்கும் பாதங்களும் அவரது வாயில் இருந்து புறப்படுகிற பட்டயமும், அவர் தண்டிக்க அதிகாரம் கொண்டுள்ளார் என்று அறிவிக்கின்றன.

### தரிசனத்தின் விபரங்கள்

ஒரு தரிசனத்தின் விபரங்கள் என்பவை பெரும்பாலும் அவற்றில் அல்லது அவற்றைப் பற்றி, சிறிதளவே தனிச்சிறப்பைக் கொண்டுள்ளன அல்லது தனிச்சிறப்பு எதுவும் கொண்டிருப்பதில்லை, ஆனால் அதிகாரம் 1ன் தரிசனத்தில், விபரங்கள் முக்கியமானவைகளாக உள்ளன. ஏழு சபைகளுக்கு எழுதிய கடிதங்களில், இயேசுவைப் பற்றிய விவரிப்புகள் (2:1, 8, 12, 18; 3:1, 7) இந்தத் தரிசனத்தில் இருந்தே பிரதானமாகத் தரவழைக்கப்

*பட்டுள்ளன - மற்றும் ஒவ்வொரு விபரமும், எடுத்துரைக்கப்பட்ட சபையின் தேவைக்கு நேரடியாக உறவுபடுகிறது.*[32] *ஆகையால் நாம், சாதாரணமாகக் கவனம் கொடுப்பதைவிட, இந்தத் தரிசனத்தின் ஒவ்வொரு பாகத்திற்கும் அதிக கவனம் கொடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது.*

*நாம், "**ஏ**ழு பொன் குத்துவிளக்குகளை"க் குறித்து (வசனம் 12ஆ) யோவான் விவரித்த இடத்தில் இருந்து தொடங்குவோம். இவைகள் நமக்கு, ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்த ஏழு கிளைகள் கொண்ட குத்துவிளக்கை நினைவூட்டுகின்றன (யாத்திராகமம் 25:31, 32), ஆனால் இங்கு ஒரு திரிபு உள்ளது. (எப்போதுமே திரிபுகளுக்காகக் கண்ணோக்கியிருங்கள்.) இவைகள் தனித்தனியே சுயாதீனமாக நிற்கும் ஏழு குத்துவிளக்குகளாய் இருந்தன.*[33] *வசனம் 20ல் இயேசு, "ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்" அதாவது ஆசியாவில் இருந்த ஏழு சபைக்குழுமங்களாம் என்று கூறினார்.*

*சபைகள் குத்துவிளக்குகளாக இருக்கவில்லை, ஆனால் விளக்குத் தண்டுகள் - விளக்குகள் வைக்கப்பட்டிருந்த தண்டுகளாக (மத்தேயு 5:15ஐக் காணவும்) இருந்தன. இயேசுதாமே வெளிச்சமாக இருக்கின்றார் (யோவான் 8:12). அந்த வெளிச்சத்தைக் கிறிஸ்தவர்கள் பிரதிபலிக்கின்றனர் (மத்தேயு 5:14-16; பிலிப்பியர் 2:15), மற்றும் சபையானது அந்த வெளிச்சத்தை உலகம் யாவும் காணும்படி உயர்த்திப்பிடிக்க வேண்டியதாக உள்ளது (எபேசியர் 3:21).*[34]

*குத்துவிளக்குகள், மிகவும் விலை உயர்ந்த உலோகமான பொன்னினால் செய்யப்பட்டிருந்தன. சபை என்பது இயேசுவுக்கு விலைமதிப்புள்ளதாக இருந்தது (நடபடிகள் 20:28; எபேசியர் 5:23, 25). பின்வருவதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: இந்தக் குத்துவிளக்குகள் ஏழு உண்மையான சபைக் குழுமங்களாய் இருந்தன, மற்றும் அவற்றில் சில ஏழ்மையாக, அற்பமாக, பிரச்சனையில் அடிபட்டவையாக இருந்தன. இருந்தபோதிலும், அவைகள் இன்னமும் (சுவிசேஷத்தின் வெளிச்சத்தை உயர்த்திப்பிடித்தல் என்ற) ஒரு நோக்கத்தைக் கொண்டிருந்தன, மற்றும் அவைகள் இன்னமும் இயேசுவுக்கு அருமையானவைகளாய் இருந்தன!*[35] *நீங்கள் ஆராதிக்கும் சபையானது எவ்வளவு சிறியதாய் இருந்தாலும், அது கர்த்தருக்கு உண்மையுள்ளதாக இருந்தால், அது அவரது கண்களில் பொன்னைக் காட்டிலும் மிகவும் மதிப்புடையதாக உள்ளது!*

*பின்பு யோவான், "அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே" இயேசுவைக் கண்டார் (வசனம் 13அ). முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள், தாங்கள் கைவிடப்பட்டிருந்ததாக உணர்ந்திருக்கலாம், ஆனால் இயேசு அங்கிருந்தார் (மத்தேயு 18:20; 28:20ஐக் காணவும்). சபைக்குழுமங்கள் தனிமைப்பட்டிருந்ததாகவும், தாக்குதலுக்கு ஆளாகியிருந்ததாகவும் உணர்ந்திருக்கலாம், ஆனால் இயேசு அவற்றின் "மத்தியில்" இருந்தார் (வசனம் 13ஆ). சபையின் ஒன்றிணைக்கும் கொள்கையாகவும் அதன் பலமாகவும் இயேசு இருந்தார் (மற்றும்) இருக்கின்றார்.*

*இன்றைய நாட்களில் பலர், இயேசு எங்கே கண்டறியப் படக்கூடுமோ, அந்த இடத்தை விட்டுவிட்டு மற்ற எல்லா இடங்களிலும் அவரைத்*

*தேடிக்கொண்டிருக்கின்றனர். "ஆவிக்குரிய வரம் பெற்ற" தலைவர்கள், மனிதரால் ஏற்படுத்தப்பட்ட ஐக்கியத்துவங்கள், மற்றும் ''புதுயுக'' மாயாவாதம் ஆகியவற்றில் அவர்கள் அவரைக் கண்ணோக்கப் பார்க்கின்றனர். நீங்கள் இயேசுவைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால், அவருடைய சபையில் அவரைக் காணுங்கள். இயேசு இருக்கும் இடத்தில் நீங்கள் இருக்க விரும்பினால், அவரது மக்களுடன் ஆராதனை செய்யுங்கள்.*

*யோவான் இயேசுவை விவரிக்கத் தொடங்கினார்,[36] அவரை "மனுஷ குமாரனுக்கொப்பானவர்" என்று யோவான் குறிப்பிட்டார் (வசனங்கள் 13ஆ; 14:14ஐக் காணவும்). இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின்போது, "மனுஷ குமாரன்" என்பது அவருக்கு மிகவும் பிரியமான குறிப்புப் பெயராக இருந்தது (உதாரணத்திற்கு மத்தேயு 8:20ஐக் காணவும்). இந்தச் சொற்றொடர், சுவிசேஷ விபரங்களில் எண்பதுக்கும் மேற்பட்ட முறைகள் காணப்படுகிறது. இந்தக் குறிப்புப் பெயரானது மேசியாத்துவச் சிந்தனை உய்த்துணர்வைக் கொண்டிருந்தது (தானியேல் 7:13).*

*முதலாவது, நாம் இயேசுவின் உடை பற்றிய ஒரு விவரிப்பைக் காணுகின்றோம்: அவர் "நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்தார்" (வசனம் 13). அந்த உடையானது சாதாரண வேலை செய்பவர்களுடையதாயிராமல், இராஜரீகத்துவம் கொண்டவர்களுடைய தாக இருந்தது (ஏசாயா 6:1ஐக் காணவும்).[37]*

*அடுத்ததாக யோவான், இயேசுவின் நபர்த்துவத்தின்மீது கவனம் செலுத்தினார்: "அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப்போலவும் வெண்மையாயிருந்தது" (வசனம் 14அ; தானியேல் 7:9ஐக் காணவும்). அவரது முடியின் வெண்மை நிறம் தூய்மையையும் பரிசுத்தத்தையும் குறிக்கிறது (ஏசாயா 1:18) அது (முதிர்) வயதின் ஞானமாகவும் இருக்கலாம் (நீதிமொழிகள் 16:31).*

*அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தது" (வசனம் 14ஆ; தானியேல் 10:6ஐக் காணவும்). "சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது" (எபிரேயர் 4:13; சங்கீதம் 139:1-4ஐக் காணவும்).*

*''அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம்[38] போலிருந்தது" (வசனம் 15அ; தானியேல் 10:6ஐக் காணவும்; எசேக்கியல் 1:7). மீகா 4:13ல் சீயோன் குமாரத்தி, "அநேக ஜனங்களை நொறுக்கிப்போடும்படிக்கு'' அவருடைய குளம்புகள் (பாதங்கள்) ''வெண்கலமாக்கப்பட்டன'.' வெளிப்படுத்தின விசேஷம் 1ல் உள்ள அடையாளத்துவமானது ''துன்மார்க்கரை மிதித்து'' அவர்களை "உள்ளங்கால்களின் கீழ் சாம்பலாக்குவதற்கு" (மல்கியா 4:3) கிறிஸ்துவின் வல்லமையைக் குறிப்பிடுகிறது.*

*"அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது" (வசனம் 15ஆ; தானியேல் 10:6; எசேக்கியல் 43:2ஐயும் காணவும்). அவரது குரல் அதிகாரம் நிறைந்ததாகவும் கெம்பீரமானதாகவும் இருந்தது, அது கடலின் அலைகள் பத்மு தீவின் பாறையாலான கரையில் மோதும்போது எழுந்த ஒலியைப் போல் இருந்தது. கர்த்தர் பேசுகின்றபோது, மனிதர்கள்*

கவனித்துக் கேட்க வேண்டும்.

"தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்" (வசனம் 16அ). வலது கரம் என்பது அதிகாரத்தின் கரமாக இருந்தது (யாத்திராகமம் 15:16). சங்கீதக்காரர் தேவனிடத்தில், "உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறது" என்று பாடினார் (சங்கீதம் 63:8ஆ). இயேசு, ஏழு நட்சத்திரங்களைக் காக்கவும் பாதுகாக்கவும் அவற்றைத் தமது வலதுகரத்தில் ஏந்திக்கொண்டிருந்தார்.

பிற்பாடு இயேசு, இந்த ஏழு நட்சத்திரங்களை "**ஏ**ழு சபைகளின் தூதர்களாம்" என்று அடையாளப் படுத்தினார் (வசனம் 20), ஆனால் இந்த விளக்கமானது, தான் பதில் அளித்துள்ளவற்றைக் காட்டிலும் அதிகமான கேள்விகளை எழுப்பியுள்ளது. ''தூதன்'' ["angel"] என்பது ஆங்கிலப் படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தையாக[39] உள்ளது, இது "செய்தியாளர்" என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது. இவர் பூமிக்குரிய செய்தியாளராக (மல்கியா 3:1; மத்தேயு 11:10) அல்லது வானத்திற்குரிய செய்தியாளராக (லூக்கா 2:9)[40] இருக்கலாம்; அர்த்தப்படுத்தப்படுவது எது என்பதைச் சந்தர்ப்பப் பொருள்தான் தீர்மானிக்க வேண்டும்.

ஏழு நட்சத்திரங்கள்/தூதர்கள் பற்றிய ஒவ்வொரு விளக்கமும் தனக்கே உரிய சிரமமான பகுதிகளை கொண்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தின் எஞ்சிய பகுதியில், ''தூதன்'' என்பது எப்போதுமே வானத்திற்குரிய செய்தியாளரையே குறிக்கிறது, எனவே அதிகாரங்கள் 1 முதல் 3 வரையிலும்கூட இந்த அர்த்தமே விரும்பித் தேர்ந்து கொள்ளப் படலாம் - ஆனால் அந்த விளக்கமானது கேள்விகளை எழுப்புகிறது: அதிகாரங்கள் 2 மற்றும் 3ல் இந்தத் தூதர்கள் குறிப்பிடப்படுவது ஏன்? மற்றும் இவர்கள் சபைக் குழுமங்களின் பாவங்களுக்குப் பொறுப்பாளி களாக வைக்கப்படுவது ஏன்?[41] மேலும், சபையின் தூதர்களுக்கு யோவான் எழுத வேண்டிய ஒரு செய்தியை (2:1, 8) அவருக்குத் தருவதற்கு அவரிடத்தில் இயேசு ஒரு தூதனை (22:16) அனுப்பியது ஏன்?

இவர்கள் பூமிக்குரிய செய்தியாளர்கள்,[42] ஒருவேளை, யோவான் நாடுகடத்தப் பட்டிருந்தபோது ஆய்வுசெய்வதற்காக அனுப்பப்பட்டிருந்த சபைகளின் பிரதிநிதிகளாக இருக்கலாம் என்று பலர் நினைக்கின்றனர். மீண்டுமாக நாம், இந்தக் கடிதங்களை இயேசு இம்மனிதர்களுக்கு எழுதி, இவர்களை சபைக்குழுமங்களின் பாவங்களுக்குப் பொறுப்பாளிகளாக்கு வது ஏன்? என்று கேட்கின்றோம். தனிப்பட்ட வகையில் நான், இந்தத் தூதர்கள் சபையின் மூப்பர்களாக இருந்தனர் என்ற கருத்தை விரும்பு கின்றேன் - இவர்கள் எபிரெயர் 13:17ன்படி, தாங்கள் ஊழியம் செய்த சபைக்குழுமங்களுக்குப் பொறுப்பாளிகளாக இருந்தனர். இருப்பினும், ஒவ்வொரு சபையிலும் ஒரே ஒரு மூப்பர் மாத்திரமே குறிப்பிடப் பட்டிருந்தார் என்ற பிரச்சனையைக் கொண்டுள்ளோம் (2:1, 8).[43]

சிலர், இந்தத் தூதர்கள் சபைக்குழுமங்களின் ஆவியைக் குறிக்கின்றவர் களாய் இருந்தனர் என்று கூறுவதன்மூலம் நேரடிச் செய்தியாளர்கள் என்ற கருத்தில் மறைந்துள்ள பிரச்சனையில் இருந்து தப்பிக்க முயற்சி செய்கின்றனர். இது உருவக மொழிநடையை விளக்கப் படுத்துவதற்கு

*இயேசு உருவக மொழிநடையைப் பயன்படுத்தினார் என்று அர்த்தப்படு கிறது என்பதே இந்த விளக்கத்தில் உள்ள பிரச்சனையாக இருக்கிறது.*

*வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய நமது படிப்பில் நமக்குத் தொடர்ச்சியாகத் தேவைப்படுகிற ஒரு கொள்கையை வலியுறுத்துவதற்கு நான், ஏழு நட்சத்திரங்களின் புதிரைப் பற்றிக் கலந்துரையாட நேரத்தைச் செலவிட்டுள்ளேன்: இந்த நட்சத்திரங்கள் யார் (அல்லது எவை) என்பதை நாம் அறிய இயலாதிருந்தாலும், நாம் இன்னமும்/அப்போதும் இயேசுவின் கருத்தைப் புரிந்துணர முடியும். அதிகாரம் 2ஐக் கண்ணோக்குங்கள்: வசனம் 1ல் இயேசு, "எபேசு சபையின் தூதனுக்கு" என்று குறிப்பிட்டார், ஆனால் வசனம் 7ல் அவர், "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை" எல்லாரும் கேட்கும்படி கட்டளையிட்டார். நட்சத்திரங்கள்/தூதர்கள் என்பது யாராக (அல்லது என்னவாக) இருந்தாலும், அவர்கள்/அவைகள் சபைகளைக் குறித்தன(ர்) - எனவே அந்த சபைகளின் உறுப்பினர்களைக் குறித்தன(ர்). எனவே, 1:16ன் குறிப்பு மொழிநடையானது, உண்மை/விசுவாசம் நிறைந்தவர்களை இயேசு தமது கரத்தில் ஏந்திக் கொண்டிருக்கின்றார் என்றும், எந்த மனிதனும் (அல்லது அரசாங்கமும்) ''அவைகளை … பறித்துக்கொள்வதும்'' முடியாது[44] (யோவான் 10:28; 2 தீமோத்தேயு 1:12ஐக் காணவும்). நட்சத்திரங்கள் யாராக (அல்லது என்னவாக) இருந்தன என்பதைத் திட்டவட்டமாக அறிவதைக் காட்டிலும் அந்தச் செய்தி அதிக முக்கியமானதாக இருப்பதில்லையா?*

*இயேசுவைப் பற்றிய விவரிப்பில் ஒரு சில விபரங்கள் எஞ்சியுள்ளன. நாம், ''… அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது'' (வசனம் 16ஆ) என்று வாசிக்கின்றோம். தேவனுடைய வசனம் ஒரு பட்டயமாக அடிக்கடி குறிப்பிடப்படுவதாலும் (எபிரேயர் 4:12; எபேசியர் 6:17)[45] பட்டயம் இயேசுவின் வாயில் இருந்து புறப்பட்டது என்பதாலும், அது தேவனுடைய வசனம் என்று அடையாளப்படுவது உறுதியாக உள்ளது. இதை சுவிசேஷத்தின் நற்செய்தி என்று நினைக்காதீர்கள்; இது கர்த்தருடைய விரோதிகளின் மீது நியாயந்தீர்ப்பதற்கான அவரது வசனமாக இருந்தது (ஏசாயா 49:2ஐக் காணவும்). அதிகாரம் 2ல், கள்ளப் போதகர்களைப் பற்றி அவர், "என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன்'' என்று கூறினார் (2:16ஆ; 19:15, 21ஐக் காணவும்).*

*கடைசியாக யோவான், ''அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது" என்று எழுதினார் (வசனம் 16இ). இந்த உருவகம், மத்தியான வேளையில் பிரகாசிக்கிற சூரியனைப் பற்றியதாக இருந்தது. இவ்விடத்தில் நமக்கு, இயேசுவின் முகம், ''சூரியனைப்போலப் பிரகாசித்த'' (மத்தேயு 17:2) மறுரூப நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. மலையில் குறைவான காலமே தோன்றிய அந்தக் காட்சி, பரலோகத்தில் நிலையானதாகியிருந்தது.*

***மீண்டுமாக தரிசனம் முழுவதும்***

*நாம் இப்போது, பின்னோக்கி அடியெடுத்து வைத்து, தரிசனத்தை*

முழுவதுமாக மீண்டும் கண்ணோக்கத் தயாராக இருக்கின்றோம். பகுதிகளை ஆராய்தல் என்பது இந்தத் தரிசனத்தின் முற்றான செயல்தாக்கத்தைப் பற்றிய கூடுதலான சிந்தனைகளை உங்கள் சிந்தைக்குக் கொண்டுவந்ததா? வசனம் 12 முதல் 16 வரையுள்ள பகுதியைப் பற்றி நான் முதன்முதலில் சிந்தித்தபோது, “அதிகாரம்” என்பதே என் சிந்தைக்கு வந்த திறவுகோல் வார்த்தையாக இருந்தது; ஆனால் தரிசனத்தைப் பற்றிய படிப்பைத் தொடருகையில் நான், அந்தச் சிந்தனையை விரிவாக்குவது அவசியம் என்று முடிவு செய்தேன். அடையாளங்களில் சித்தரிக்கப்பட்ட அதிகாரம் என்பது நேர்மறையான மற்றும் எதிர்மறையான என்ற இருவகைத் திறன்களையும் கொண்டிருந்தது. எடுத்துக்காட்டாக, வசனம் 16ன் உருவகத்தை எடுத்துக்கொள்ளவும்: ஒரு பட்டயமானது தண்டிக்கவும் முடியும் பாதுகாக்கவும் முடியும், மற்றும் சூரியன் என்பது எரிப்பதாகவும் அல்லது ஆசீர்வதிப்பதாகவும், துன்புறுத்துவதாகவும் அல்லது குணப்படுத்து வதாகவும் இருக்க முடியும் (சங்கீதம் 84:11; மல்கியா 4:2ஐக் காணவும்).

இந்தத் தரிசனத்தின் நோக்கத்தை நான் மீண்டும் எடுத்துரைக்க அனுமதியுங்கள்: இயேசு *அறிதலுக்கான* அதிகாரம் கொண்டுள்ளார் மற்றும் அந்த அறிவின்படி *செயல்படுவதற்கான* அதிகாரத்தையும் கொண்டுள்ளார். இயேசு அறிதலுக்கான அதிகாரம் கொண்டுள்ளார் என்பது இந்தத் தரிசனத்தில் தெளிவாக உள்ளது: அவர் சபைகளின் மத்தியில் இருந்தார்/இருக்கின்றார், எனவே என்ன நடந்துகொண்டிருந்தது என்பதை அறிந்தார். அவரது கண்கள் எல்லாவற்றையும் காணுகின்றவையாய் இருந்தன/இருக்கின்றன. அவர் தமது அறிதலின்படி *செயல்பட* அதிகாரம் கொண்டுள்ளார் என்பதும் தெளிவாக உள்ளது: அவர் (தமது பாதங்கள் மற்றும் தமது பட்டயம் ஆகியவற்றைக் கொண்டு) தண்டிக்கத் தயாராயிருந்தார், மற்றும் அவர் (தமது வல்லமை நிறைந்த வலது கரத்தைக் கொண்டு) பாதுகாக்கவும் தயாராயிருந்தார். இப்போது, அதிகாரங்கள் 2 மற்றும் 3ல் உள்ள தரிசனத்தின் பயன்பாட்டைக் கண்ணோக்கவும்: அந்த அதிகாரங்களில், இயேசு, *அறிகின்ற* ஒருவராகச் சித்தரிக்கப் பட்டுள்ளார் (2:2, 9, 13), ஆனால் அவர் அறிகின்றவற்றைப் பற்றி அவரால் சிலவற்றைச் *செய்யவும் முடியும்* (2:5, 10, 11, 16, 17).

கர்த்தர் தமது மக்களின் சார்பாகச் செயல்படுவதற்குத் *தயாராக, மனவிருப்பம் உள்ளவராக, அதைச் செயல்படுத்தக் கூடியவராக* இருந்தார் என்பதே, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கு இந்தத் தரிசனத்தின் செய்தியாக இருந்தது என்பது எனது முடிவாக உள்ளது. அவர் இன்னமும் தயாராக இருக்கின்றார் என்பதே இருபத்தியோராம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்குச் செய்தியாக உள்ளது! “கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?” (சங்கீதம் 27:1).

## யோவான் உணர்ந்தது என்ன (1:17)

யோவான் இந்தத் தரிசனத்திற்கு எவ்வாறு மறுசெயல் செய்தார்? அவர்,

*''நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில்விழுந்தேன்'' என்று அறிக்கை செய்தார் (வசனம் 17அ).* யோவான் *அவரை ஆராதிப்பதற்கென்று முகங்குப்புற விழவில்லை;*[46] *மாறாக, அவர் பயத்தினால் மேற்கொள்ளப்பட்டவராக இயேசுவின் பாதங்களில் வீழ்ந்தார். அவர்மீது இயேசு தமது கரத்தை வைத்து, "பயப்படாதே" என்று கூறவேண்டியதாயிற்று (வசனம் 17ஆ).*

*யோவான் இயேசுவின் நெருங்கிய நண்பர்களில் ஒருவராக இருந்தார். உணவு வேளையில் சீஷர்கள் (மேஜையில்) சாய்ந்திருக்கையில், யோவான் தமது எஜமானரின் வலது புறத்தில், ''இயேசுவின் மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தார்'' (யோவான் 13:23). அவர், "இயேசுவுக்கு அன்பானவனா யிருந்த" சீஷராக இருந்தார் (யோவான் 13:23;* KJV*) - இருப்பினும் அவர் இயேசுவை அவரது எல்லா மகிமையிலும் கண்டபோது, "என் நண்பரே, உங்களை மீண்டும் காண்பது நல்லதாக உள்ளது!'' என்று கூறிக் கொண்டிருக்கவில்லை. மாறாக, மற்ற எல்லாரையும் போலவே, தெய்வீகத்தின் சிறுகாட்சி அவருக்குத் தரப்பட்டபோது, அவர் தமது தலையில் தண்டாயுதத்தால் அடிபட்டது போலத் தரையில் வீழ்ந்தார் (ஏசாயா 6:5; எசேக்கியல் 1:28; 3:23; 43:3; தானியேல் 8:17, 27; 10:8-10; மத்தேயு 17:6; லூக்கா 5:8; நடபடிகள் 26:14).*

*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை "கிறிஸ்துவைப் பற்றிய கடைசி வார்த்தை" என்று யூஜீன் பீட்டர்ஸன் அவர்கள் அழைத்தார் மற்றும் அவர் அதை, "மனுஷகுமாரன் பற்றிய தானியேலின் தரிசனத்தின் ... மகிமையுள்ள கடைசி வார்த்தை'' என்றும் குறிப்பிட்டார்.*[47] *இன்றைய நாட்களில், முன்னணையில் பிறந்த ஒரு குழந்தை, மாபெரும் போதகராகவும் குணமாக்குபவராகவும் வளர்ந்தவிதம் பற்றிப் பெரும்பான்மையானோர் அறிந்துள்ளனர். சிலுவையில் மரித்து பின்பு மரித்தோரில் இருந்து உயிர்த்த ஒருவரைப் பற்றியும்கூடப் பலர் கேள்விப்பட்டும் உள்ளனர். இருப்பினும் மிகவும் சிலர்தான், ''நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாக" உள்ள மகிமையுள்ள ஒருவரைப் பற்றி அறிந்துள்ளனர் (1 தீமோத்தேயு 6:15; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 17:14; 19:16).*

*தேவனுடைய பிரசன்னத்திற்குள் நாம் வருகையில், அதிகமான (மிதமிஞ்சிய) முனைப்பகுதிகளை நாம் தவிர்க்க வேண்டும். இதற்கு மறுபுறத்தில் நாம், பயத்தினால் முடக்கப்பட்டிருந்தால், அவரை "பிதாவே" (மத்தேயு 6:9) என்று அழைக்கின்ற பிள்ளைகளுக்குரிய நெருக்கமான தன்மையை நாம் ஒருக்காலும் அறிய இயலாது. இதற்கு மறுபுறத்தில், நாம் அதிகம் அறிந்தவர்களாயிருந்தால், அவருக்குச் செலுத்த வேண்டிய மரியாதையை யும் பயபக்தியையும் அவருக்கு அளிப்பதில் நாம் தவறிவிடுவோம். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "ஆதலால் ... நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம்" என்று கூறினார் (எபிரேயர் 12:28). வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள் பின்வரும் கருத்தை ஏற்படுத்தினார்:*

> *கிறிஸ்துவைப் பற்றியும் அவரது மகிமையைப் பற்றியும் ஒரு புதிய விழிப்புணர்வு இன்றைய நாட்களில் சபைக்குத் தேவைப்படுகிறது. நாம் அவரை, ''உயரமும் உன்னதமுமான''வராக (ஏசாயா 6:1) காண்பது அவசியமாக உள்ளது. இன்றைய நாட்களில் நமது சபை கூடுகைகளில் பயபக்தி மற்றும் ஆராதனை ஆகியவை இல்லாமை என்ற அபாயம் உள்ளது. நாம் உடைந்து நொறுங்கி அவரது பாதங்களில் வீழ்வதற்குப் பதிலாக, நமது பாதங்களில் நாம் நிற்குதல் பற்றிப் பெருமையடித்துக் கொள்கின்றோம்.[48]*

*துன்மார்க்கத்தை/தீமையைத் தண்டிக்கும் வல்லமை நிறைந்த கர்த்தர் என்ற கருத்து சிலருக்கு சௌகரியமானதாக இருப்பதில்லை. அவர்கள், யூதத்தச்சர், மங்கிய கலிலேயர், மென்மையான மேய்ப்பர் என்ற கருத்தை விரும்பித் தேர்ந்து கொள்கின்றனர். இருப்பினும், உங்கள் வாழ்வில் தீமை வருகிறபோது - உலகம் உங்களுக்கு எதிராகத் திரும்பி நம்பிக்கையானது உங்கள் பலகணி வழியே பறந்து வெளிச்சென்று விடும்போது - உங்கள் பிரச்சனைகளையும் இருதயவேதனைகளையும் அறிகின்ற ஒருவர், அதைப் பற்றிச் சிலவற்றைச் செய்ய அதிகாரம் கொண்டுள்ள ஒருவர் உங்களுக்குத் தேவை! வெளிப்படுத்தின விசேஷம் 1:9-20, அவ்வாறு நமக்குத் தேவைப்படுபவர் இயேசுவே என்று கூறுகிறது!*

## *முடிவுரை*

*இந்தப் படிப்பின் விளைவாக நீங்கள், ''மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர்'' என்று தானியேல் விவரித்த ஒருவரைப் பற்றி மாபெரும் மதிப்புக் கொண்டிருக்க வேண்டும் என்பதே எனது ஜெபமாக உள்ளது. இயேசுவைப் பற்றிய மற்ற சித்தரிப்புகளும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் காணப்படுகின்றன (5:6, 7; 12:1-6; 14:1, 14; 19:16; 22:12-17), ஆனால் அதிகாரம் ஒன்றில், அவரது மாட்சிமை, அவரது மகத்துவம் மற்றும் அவரது அதிகாரம் ஆகியவற்றை நமக்குக் காண்பிக்கிற இந்தத் தரிசனத்தைப்போல் விரிவான தரிசனம் வேறெதுவும் இல்லை!*

*கான்ஸ்டன்டைனின் மைத்துனரான (விசுவாசத்தில் இருந்து விலகிச் சென்றவர் என்று அழைக்கப்பட்ட) ஜூலியன் என்பவர் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் வளர்க்கப்பட்டார்; ஆனால் அவர் தமது இளமையில் தமது கிறிஸ்தவ விசுவாசத்தைத் துறந்து புறதெய்வ வணக்கத்தைத் தழுவிக் கொண்டார். அவர் கிறிஸ்தவத்தைத் துடைத்தெறியத் தமது வாழ்வு முழுவதையும் செலவிட்டார். கி.பி. 363ல், பெர்சியாவிற்கு எதிரான அவரது முகாமில், அவரது படையில் இருந்த ஒரு போர்வீரர், ஏளனம் செய்யப்பட்டிருந்த இன்னொரு கிறிஸ்தவப் போர்வீரரிடம், "உங்கள் தச்சர் இப்போது எங்கே இருக்கின்றார்?'' என்று கேட்டார். அதற்கு அந்தக் கிறிஸ்தவர், ''அவர் உங்கள் பேரரசருக்கு சவப்பெட்டியொன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றார்'' என்று பதில் அளித்தார். ஒருசில மாதங்களுக்குப் பின்பு, யுத்தத்தில் ஜூலியன் மரணத்திற்கு ஏதுவாகக்*


காயமடைந்தார். மரணம் நெருங்கும்போது அவர் தமது கண்களை வானத்தை நோக்கி ஏறெடுத்து, “ஓ கலிலேயனே, நீ வெற்றி பெற்று விட்டாய்!” என்று கதறினார்.[49]

விசுவாசத்தில் இருந்து விலகிச் சென்ற ஜுலியனைப் போல் இருக்காதீர்கள்; இயேசுவின் கர்த்தத்துவத்தை ஒப்புக்கொள்வதற்கு மரணம் வரை காத்திருக்காதீர்கள். இப்போதே அவருக்கு முன்பாக விழுந்து வணங்கி, அவரை உங்கள் வாழ்வின் கர்த்தர் என்று இன்றே அறிக்கை யிடுங்கள் (மத்.10:32), ஒவ்வொரு நாளும் அவருக்காகவே வாழ்வதென்று தீர்மானம் செய்யுங்கள்![50]

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

இந்தத் தரிசனத்தின் விபரம் பற்றி, ஓவியக்கலைஞரின் தரவழைப்பு பாடத்தில் இடைநுழைக்கப் பட்டுள்ளது. நீங்கள் இதைப் பெரிதுபடுத்தி, உங்கள் போதனையில் பயன்படுத்த விரும்பலாம். நீங்கள் போதிக்கும் போது, கரும்பலகையில் வரையக்கூடிய எளிய சித்திரம் ஒன்று கீழே தரப்படுகிறது:



இயேசுவின் இடது கரத்தில் உள்ள திறவுகோலைப் பற்றிய விபரங்கள் குறித்து நீங்கள் வியப்படையும் விஷயத்தில், அவர் ''மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிரு(க்கின்றார்)'' என்று 1:18 கூறுகிறது, மற்றும் அவர் "தாவீதின் திறவுகோலை உடையவர்" என்று 3:7 விவரிக்கிறது.

---

குறிப்புகள்

[1]இந்த தரிசனத்தின் அடிப்படை அர்த்தம், தானியேல் 2ல் நேபுகாத்நேச்சாரின் கனவினுடைய அர்த்தத்தைப் போன்றதாகவே உள்ளது: ரோமப் பேரரசின் நாட்களில், இயேசு தமது சபையை நிலைநாட்டுவார் (இது "ஒருக்காலும் அழியாத இராஜ்யமாக" அதாவது "என்றென்றைக்கும் நிலைநிற்பதாக" இருக்கும்; தானியேல் 2:44; தானியேல் 7:15-18, 27ஐக் காணவும்). இருப்பினும் இந்தப் பாடத்தில் நமது ஆர்வமானது ''மனுஷகுமாரனுடைய சாயலுக்கு ஒப்பானவர்'' என்ற சித்தரிப்பின்மீதே மையங்கொண்டுள்ளது. [2]ஹிபுரீய வேதாகமத்தின் அடிக்குறிப்பு ஒன்று, "Or, *the Son of Man*" என்று கூறுகிறது. [3]Robert Mounce, notes on the Book of Revelation in *The NIV Study Bible,* gen. ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1926. [4]William Barclay, *The Revelation of John*, vol. 1, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 40. [5]இராஜ்யம் இன்னும் வரவில்லை என்று சிலர் உரிமைகோருவதென்பது எவ்வளவு வினோதமானதாக உள்ளது! "யோவானும் அவரது சமகாலத்திய சகோதரர்களும் 'இராஜ்யத்தை' எதிர்பார்த்திருந்தவர்களாயிராமல், அதில் பங்காளர்களாக இருந்தனர்" (Rubel Shelly, *The Lamb and His Enemies: Understanding the Book of Revelation* [Nashville: 20th Century Christian Foundation, 1983], 23). [6]KJVமற்றும் தமிழ் வேதாகமம் ஆகியவற்றில் "patience" அதாவது "பொறுமை" என்றுள்ளது, இது "பொறுமையுடன் சகித்திருத்தல்" என்று அர்த்தப்படும். [7]யோவான் "இருந்தேன்" (கடந்த கால வினைச்சொல்) என்பதைப் பயன்படுத்துதலானது, அவர் இதை எழுதியபோது பத்முதீவில் இருக்க வில்லை, ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தை அவர் எழுதி முடித்த போது, அவர் எபேசுவில் இருந்தார் என்று நிரூபிக்கிறது என்பதாக நம்புகின்றனர். அவ்வாறு இருக்கலாம், ஆனால் "இருந்தேன்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "இருக்க வந்தேன்" என்று நேரடி அர்த்தம் தருகிறது. யோவான், பத்முதீவில் தாம் "இருக்க வந்தது" எப்படி என்பதைத் தமது வாசகர்களுக்குக் கூறினார். இவ்வசனப்பகுதியானது அவர் அப்போதும் அங்கிருந்தாரா இல்லையா என்பது பற்றி ஒன்றும் கூறுவதில்லை. [8]Don Shackelford, "Foreword," *Harding University Lectures* (1992): 5. [9]"தேவ வசனத்தினிமித்தமும் இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும்" என்ற சொற்றொடரானது, யோவான் பத்மு தீவிற்குப் பிரசங்கிப்பதற்காகச் சென்றார் என்றோ அல்லது வெளிப்படுத்துதலைப் பெற்றுக் கொள்வதற்காக அவர் அங்கு சென்றார் என்றோ அர்த்தப்படுத்தவும் கூடும். இருப்பினும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் பிற இடங்களில் இந்தச் சொற்றொடரின் பயன்பாடானது (6:9; 20:4) அவர் உபத்திரவப் படுத்தப்பட்டதின் கருத்தையே எடுத்துரைக்கிறது. [10]"கர்த்தருடைய நாள்" என்ற சொற்றொடர், வேதாகமம் முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுள்ள "கர்த்தரின் நாள்" என்ற தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நாளைக் குறிக்கும் சொற்றொடருடன்

குழப்பிக்கொள்ளப்படக் கூடாது, "கர்த்தரின் நாள்" என்பது பெரும்பாலும் கடைசி நாளைக் குறிப்பிடுகிறது (ஏசாயா 2:12; யோவேல் 2:31; யோவான் 8:56).

[11]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 4th rev. ed., eds. William F. Arndt and F. Wilbur Gingrich (Cambridge: University Press, 1952), 459. [12]வாரத்தின் முதல் நாளைக் கர்த்தருடைய நாள் என்று குறிப்பிட்ட தொடக்ககால எழுத்தாளர்களின் குறிப்பிற்கு ஒரு மாதிரியானது, Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979) என்ற புத்தகத்தின் 107ம் பக்கத்தில் உள்ளது. [13]ஏழாம் நாள் அட்வென்டிஸ்டுகள் என்ற நாமகரணக் கூட்டத்தார், ''மனுஷ குமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார்" என்று கூறுகிற மாற்கு 2:28ஐத் தவறாக மேற்கோள் காண்பித்து, "கர்த்தருடைய நாள்" என்பது ஏழாம் நாளைக் குறிக்கிறது என்ற கருத்தை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். உண்மையில் அவ்வசனப்பகுதியானது, இயேசு, ஓய்வுநாள் உட்பட, ஒவ்வொரு நாளுக்குமே ஆண்டவராயிருக்கின்றார் என்ற கருத்தையே வலியுறுத்துகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 1:10ல் உள்ள "கர்த்தருடைய நாள்" என்ற சொற்றொடர், ஆங்கிலம், தமிழ் மற்றும் கிரேக்கம் ஆகிய மொழிகளில், மாற்கு 2:28ல் பயன்படுத்தப்பட்ட சொற்றொடரில் இருந்து மாறுபட்டதாக உள்ளது. [14]"ஆவிக்குள்ளானேன்" என்பதை ஆவியானவரால் ஏவப்பட்டிருத்தலைக் குறிப்பதற்குப் பயன்படுத்தும் இன்னொரு வேதவசனம் மத்தேயு 22:43 ஆகும். [15]மற்ற அர்த்தங்களும் சாத்தியமானவைகளாக உள்ளன. மூலகிரேக்க வசனத்தில், பெரிய எழுத்துக்களுக்கும் சிறிய எழுத்துக்களுக்கும் வித்தியாசம் ஏற்படுத்தப்பட்டிருப்பதில்லை. மேலும் மூலவசனத்தில், இந்தச் சொற்றொடரில் ["the" என்ற] திட்டவட்டச் சுட்டுச்சொல் அடங்கியிருப்பதில்லை. இவ்விதமாக இந்தச் சொற்றொடர் "in spirit" என்று மாத்திரம் மொழிபெயர்க்கப் பட்டிருக்கக்கூடும், மற்றும் இது யோவானின் மனநிலையைக் குறிப்பதாயிருக்கக் கூடும். யோவான் 4:24, ''ஆவியில்'' தொழுதுகொள்ளுதல் பற்றி நமக்குக் கூறுகிறது, இது வெளிப்படுத்தின விசேஷம் 1:10ல் உள்ள அதே கிரேக்க வார்த்தைகளைப் பயன்படுத்துகிறது. இவ்விதமாக, ''ஆவிக்குள்'' என்பது, யோவான் கர்த்தருடைய நாளில் ஆராதித்துக் கொண்டிருந்தார் என்று மட்டும் அர்த்தப்படக்கூடும். "ஆவிக்குள்" என்பது எதை அர்த்தப்படுத்தினாலும், யோவான் தாம் பெறவிருந்த வெளிப்படுத்துதலை ஏற்றுக்கொள்ளக் கூடியவராக இருந்தார் என்பதே கருத்தாக உள்ளது. [16]இவ்வாறே, பேதுருவின் ஜெபவேளையானது அவர் பெற்ற தரிசனத்தை அவர் ஏற்றுக்கொள்ளக் கூடியவராக்கிற்று (நடபடிகள் 10:9, 10). [17]This paragraph was adapted from William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 70. [18]இது எக்காளத்தின் சத்தமல்ல, ஆனால் எக்காள சத்தம் போல் முழக்கமிட்ட ஒரு சத்தம் என்பதைக் கவனியுங்கள். இந்த வித்தியாசத்தைச் சிந்தையில் காத்துக் கொள்ளுங்கள்; வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் பற்றிய நமது படிப்பில் நாம் இதனூடே அடிக்கடி கடந்து செல்வோம். [19]எக்காள சத்தத்துடனான ஊர்வலங்கள், முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றிக் கவனம் ஈர்க்கவும் அவற்றை அறிமுகப்படுத்தவும் நீண்டகாலமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. எக்காளத்தின் சில பழைய ஏற்பாட்டு உபயோகங்களுக்கு, எண்ணாகமம் 10ஐக் காணவும். [20]இது, "Write on a scroll" (NIV) என்றே நேரடி அர்த்தமாகக் கூறுகிறது. கி.பி.இரண்டாம் நூற்றாண்டு வரையிலும், பக்கங்கள் கொண்ட புத்தகங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

[21]இது எதேச்சையான வகைப்படுத்துதலாக இருப்பதில்லை. இந்தப் புத்தகத்தில் உள்ள "ஆசியாவின் ஏழு சபைகளும் பத்மு தீவும்" என்ற வரைபடத்தைக் காணவும். எபேசுவில் இருந்து நீங்கள் வடக்குக் கரையோரமாகவே சிமிர்னாவுக்குச் செல்ல

முடியும், பின்பு அங்கிருந்து இன்னும் வடக்கே சென்றால் பெர்கமுவுக்குச் செல்லுவீர்கள். பெர்கமுவில் இருந்து நீங்கள் உள்நாட்டிற்குள் திரும்பினால் தியத்தீராவை அடைய முடியும். தியத்தீராவில் இருந்து தெற்கில் பயணம் சென்றால் நீங்கள் சர்தை, பிலதெல்பியா மற்றும் லவோதிக்கேயா ஆகியவற்றிற்குச் சென்று சேர முடியும். லவோதிக்கேயாவில் இருந்து மேற்கில் பின்னோக்கிப் பயணம் சென்றால் நீங்கள் எபேசுவைச் சென்று சேரமுடியும். ஒரு வட்டம் என்பது முழுமையின் அடையாளமாக உள்ளது, எனவே இந்தப் பயணத்தில் கண்டறியப்படுகிற முறையற்ற வட்டம், இந்த சபைகள் அந்த நாட்களில் - மற்றும் எந்த நாட்களிலும் - உள்ள எல்லா சபைகளையும் குறித்தன என்பதற்கு இது இன்னொரு நிரூபணமாக இருக்கலாம். [22]இந்தச் செய்தியை KJV மற்றும் தமிழ் வேதாகமங்கள், "I am Alpha and Omega, the first and the last" ["அது: நான் அல்பாவும் ஒமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்"] என்ற வார்த்தைகளுடன் தொடங்குகிறது, இவ்விதமாக இது பேசுபவர் இயேசுவே என்று அடையாளப்படுத்துகிறது (வசனம் 17ஐக் காணவும்). தொடக்ககாலக் கையெழுத்துப் பிரதிகளில் இவ்வார்த்தைகள் இல்லை, எனவே இவை NASB வேதாகமத்திலும் சமீபத்திய பிற மொழிபெயர்ப்புகளிலும் காணப்படுவதில்லை. இருப்பினும், இந்தக் குரல் அனேகமாக இயேசுவின் குரலாகவே இருந்திருக்க வேண்டும்: யோவான் திரும்பினபோது, அவர் கண்டவர் இயேசுவாயிருந்தார், இதற்குப்பின் கொஞ்ச நேரத்திலேயே எழுதுவதற்கான கட்டளையை இயேசு மீண்டும் கூறினார். [23]இது, "யார் பேசியது என்று பார்ப்பதற்காக நான் திரும்பினேன்" என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது. [24]KJV வேதாகமத்தில், "candlesticks" என்றுள்ளது, ஆனால் யோவான் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை எழுதிப் பல ஆண்டுகள் வரையிலும் மெழுகுவர்த்திகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கவில்லை. [25]இவர் இயேசுவே என்று நாம் அறிகின்றோம், ஏனென்றால் வசனம் 18ல் அவர், "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" என்று கூறினார். 2:18ல் அவர் தம்மை "தேவகுமாரன்" என்று அடையாளப்படுத்தினார். [26]இந்த செயல்முறை, பாடத்திற்குப் பாடம் வேறுபடும், ஆனால் ஒரு தரிசனம் கலந்துரையாடப்படும்போது, இங்கு குறிப்பிடப்பட்ட மூன்று படிநிலைகள், பாடத்தின் ஏதாவதொரு இடத்தில் பொதுவாகக் காணப்படும். [27]உதாரணமாக, ஒரு இடத்தில், கடலில் இருந்து வந்த மிருகம் ஏழு தலைகளைக் கொண்டிருந்தது என்ற விவரிக்கப்பட்டது (13:1), ஆனால் இன்னொரு வசனப்பகுதியில் அது ஒரே ஒரு வாயைக் கொண்டிருந்தது என்று கூறப்படுகிறது (16:13). [28]அதிகாரம் 1ல், "மனுஷகுமாரனுக்கொப்பானவர்" என்பவர், "ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே" நின்றுகொண்டிருப்பதாக மாத்திரம் குறிப்பிடப் படுகின்றார் (வசனம் 13). இதற்கு மறுபுறம், அதிகாரம் 2, அவர் "ஏழு பொன் குத்து விளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர்" என்று வலியுறுத்துகிறது (வசனம் 1). [29]*The Holy Bible: The New Testament in Modern Speech,* ed. Richard F. Weymouth. Quoted in *The New Testament from 26 Translations* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1967). [30]"பட்டயம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, குறுகிய ரோமானிய வாளையோ (*machaira*) அல்லது நீண்ட, குறுகலான கத்தியையோ குறிப்பதற்கான வார்த்தையாக இன்றி, திரேசியாவில் தோற்றுவிக்கப்பட்ட, யுத்தத்திற்கான கனத்த பட்டயத்தைக் குறிக்கும் வார்த்தையாக (*rhomphia*) உள்ளது.

[31]"Power" என்பதற்குத் தொடர்புடைய இன்னொரு ஆங்கில வார்த்தை "authority" என்பதாக உள்ளது. [32]முதல் தரிசனத்தில் உள்ள ஒவ்வொரு விபரமும் முக்கியமானவை என்பதற்கு நாம் மற்ற குறிப்புகளைக் கண்டறிகின்றோம்: தங்களின் தனிச்சிறப்பை வலியுறுத்தும் இரண்டு அடையாளங்களை இயேசு

விளக்கப்படுத்தினார் என்ற உண்மை மற்றும் குத்துவிளக்குகளின் அடையாளத்துவமானது 2:5ன் எச்சரிக்கைக்கும் பயன்படுத்தப் பட்டுள்ளது. [33]இவ்விதமாக இயேசு, "குத்துவிளக்குகளின் மத்தியிலே" நிற்கக் கூடியவராய் இருந்தார் (வசனம் 13). [34]பின்வரும் பொருத்தப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும்: குத்துவிளக்குகள் என்பவை உள்ளூர் சபைக்குழுமங்களாக இருந்தன. நமது வெளிச்சங்கள் பிரகாசிக்க வேண்டும் என்று நாம் விரும்பினால், உள்ளூர் சபையில் நாம் செயல்துடிப்புள்ள உறுப்பினராக இருக்க வேண்டும். உள்ளூர் சுய அதிகாரம் பற்றிய இன்னொரு சத்தியம் இவ்விடத்தில் போதிக்கப்படலாம்: தனித்தனியான குத்துவிளக்குகள் என்பவை, ஒவ்வொரு சபைக்குழுமமும் தனித்தனியானது மற்றும் சுயாதீனமானது, அது இயேசுவுக்கு மாத்திரம் கணக்கொப்புவிக்க வேண்டியதாக உள்ளது என்பதை நினைவூட்டுகின்றன. [35]ஏழில் ஐந்து சபைக்குழுமங்களை இயேசு கடிந்துகொண்டார் என்பது உண்மையே, ஆனால் அவர் அவற்றைப் பற்றி அக்கறையற்று இருந்திருந்தால் அவ்வாறு செய்திருக்கமாட்டார். [36]இது ஒன்று மாத்திரமே புதிய ஏற்பாட்டில் இயேசுவைப் பற்றிய விவரிப்பாக உள்ளது - இது நேரடி அர்த்தம் கொண்டிருப்பதில்லை. [37]வேலைசெய்யும் மனிதர்கள் குறுகிய அங்கிகளை அணிந்தனர், அது இடுப்பைச் சுற்றித் துணியால் அல்லது தோல்வாரினால் (கச்சையினால்) கட்டப்பட்டதாக இருந்தது. இயேசு, மார்பருகே பொற்கச்சையுடன் கூடிய நீண்ட அங்கியை அணிந்திருந்தார். சில விளக்கவுரையாளர்கள், வசனம் 13ல், பிரதான ஆசாரியரின் உடையினுடைய விவரிப்பைக் காணுகின்றனர் (வசனம் 3ஐ யாத்திராகமம் 28:4, 39; 29:5; லேவியராகமம் 16:4 ஆகியவற்றுடன் ஒப்பிடவும்). [38]"வெண்கலம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "தாமிரம்" என்பதற்குரிய வார்த்தையை உள்ளடக்குகிற கூட்டுவார்த்தையாகும், ஆனால் என்ன தாமிரக் கலப்பு உலோகம் இவ்விடத்தில் குறிப்பிடப்பட்டது என்பது தெளிவாக இல்லை. பித்தளை என்பது தாமிரமும் துத்தநாகமும் கலந்த உலோகக் கலவையாக உள்ளது, வெண்கலம் என்பது தாமிரமும் தகரமும் பெரும்பான்மை யாகக் கொண்டுள்ள உலோகக் கலவையாக உள்ளது. பித்தளை மற்றும் வெண்கலம் ஆகிய இரண்டுமே அவற்றின் பலம் மற்றும் நீடித்த தன்மை ஆகியவற்றிற்கென்று நன்கு அறியப்பட்டுள்ளன (அவைகள் துருப்பிடிப்பதில்லை). [39]இவ்விடத்தில் *aggelos* என்ற கிரேக்க வார்த்தை உள்ளது. இரண்டு கிரேக்க எழுத்துக்கள் *gammas* (*g's*) பக்கம் பக்கமாக இருக்கிறபோது, முதல் எழுத்து, கிரேக்க எழுத்தான *nu* (*n* என்ற ஒலிகொண்டது) என்பதுபோல் உச்சரிக்கப்பட்டது. [40]சில விளக்கவுரையாளர்கள், "வானவியல் செய்தியாளர்கள்" மற்றும் "வானுலகச் செய்தியாளர்கள்" என்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றனர்.

[41]உதாரணமாக, 2:1-3ல் இயேசு, "எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்: ... உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், ... அறிந்திருக்கிறேன்" என்று கூறினார். "உன்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை(யும்) பன்மைச் சொல்லாக இன்றி ஒருமைச் சொல்லாகவே உள்ளது. காவல் தூதர்கள் சபைக்குழுமங்களுக்குப் பொறுப்பாளர்களாய் இருந்தனர் என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். குறிப்பிட்ட சில தனிநபர்களைத் தூதர்கள் கவனித்துக் கொண்டுள்ளனர் என்று வேதாகமம் கருத்துத் தெரிவிக்கிறது, ஆனால் ஒவ்வொரு சபைக்குழுமத்திற்கும் ஒரு தூதன் நியமிக்கப்பட்டிருப்பது பற்றி வேத வசனங்கள் எதுவும் கூறுவதில்லை. [42]நாமகரணக் கூட்டங்களின் விளக்கவுரையாளர்கள், ஒவ்வொரு சபைக் குழுமத்தின் "தூதன்" என்பவர் அதன் "பாஸ்டர்" அல்லது "பிஷப்" தான் என்று கூறுவதில் மிகவும் விருப்பம் கொண்டுள்ளனர், ஆனால் நவீனகாலத்து நாமகரணக் கூட்டங்களில் உள்ள ஒரு

*பாஸ்டர்/ஒரு பிஷப் என்ற முறைமைகள் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் அறியப்படாதவைகளாக இருந்தன.* [43]*ஒவ்வொரு தூதனும் சபைக்குழுமத்தின் மூப்பர்த்துவத்திற்கென்று (பிரதிநிதியாக) நிற்பதாகச் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.* [44]*இது, ஒரு கிறிஸ்தவர் "கிருபையில் இருந்து விழுந்துபோக" இயலாது என்று அர்த்தப்படுவதில்லை. யோவான் 10:28 மற்றும் அதைப் போன்ற வசனப்பகுதிகள், மனிதன் என்ன செய்யக்கூடும் என்று அல்ல, தேவன் என்ன செய்யக்கூடும் என்பது பற்றிப் பேசுகின்றன. புத்தகமானது, "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" என்று இன்னமும் கூறுகிறது (1 கொரிந்தியர் 10:12).* [45]*வெளிப்படுத்தின விசேஷம் 1ல் "பட்டயம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை, எபேசியர் 6 மற்றும் எபிரெயர் 4ல் உள்ள பட்டயம் என்பதற்கான அதே வார்த்தையாக இருப்பதில்லை. இது வெளிப்படுத்தின விசேஷம் 1ல் வசனத்தின் நோக்கம் மாறுபட்டதாக இருப்பதால் இவ்வாறு இருந்திருக்கலாம். இருந்தபோதிலும், வசனத்தைப் பட்டயம் என்று உருவகித்தல் ஒரேமாதிரியானதாகவே உள்ளது.* [46]*4:10ல் இருபத்திநான்கு பேர் தேவனைத் தொழுதுகொள்வதற்காக அவரது அரியணையின்முன்பாக வீழ்ந்தனர், ஆனால் யோவானுக்கு இயேசு கூறிய ("பயப்படாதே" என்ற) வார்த்தையானது, யோவான் வீழ்வதற்குப் பயமே காரணமாயிற்று என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.* [47]Eugene H. Peterson, *Reversed Thunder* (San Francisco: HarperCollins Publishers, 1988), 32. [48]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 570. [49]This story is found in Theodoret, *Church History* 3.20. [50]*இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், கிறிஸ்தவரல்லாத வர்கள் ஞானஸ்நானம் பெறவேண்டியதன் அவசியத்தைக் கூறுங்கள் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38), மற்றும் உண்மையற்றுப் போயிருக்கும் கிறிஸ்தவர்கள் மீளக்கட்டு விக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் கூறுங்கள் (கலாத்தியர் 6:1; நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16).*


## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *"மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர்" பற்றித் தரிசனம் கண்ட பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி யார்?*
2. *"மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர்" என்பவர் யார்?*
3. *யோவான் பத்மு தீவில் இருந்தது ஏன்? நீங்கள் எப்போதாவது, ''தேவனுடைய வசனத்தினிமித்தமும் இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும்'' உபத்திரவப் பட்டிருக்கின்றீர்களா? அவ்வாறு உபத்திரவப்பட்டவர்கள் யாரையேனும் நீங்கள் அறிந்திருக் கின்றீர்களா? அப்படிப்பட்ட உபத்திரவம் உங்களை உணரச்செய்வது என்ன?*
4. *"கர்த்தருடைய நாள்" என்பது எதைக் குறிக்கிறது?*
5. *யோவான், ''ஆவிக்குள்ளானேன்'' என்று கூறியபோது எதை அர்த்தப் படுத்தினார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?*
6. *இந்தப் புத்தகத்தில் உள்ள வரைபடத்தில் ஆசியாவில் ஏழு சபைகள் இருந்த இடங்களைக் கண்டறியவும்.*

7. *அதிகாரம் 1 பற்றிய தோராயமான வரைபடத்தை வரைய முயற்சி செய்யவும்.*
8. *1:12-19ல் இயேசுவைப் பற்றிய சித்தரிப்பை வாசிக்கும்போது நீங்கள் பெறுகின்ற மனப்பதிவு என்ன?*
9. *அதிகாரம் 1ன் தரிசனத்தில் உள்ள விபரங்கள் முக்கியமானவைகளா? இது தரிசனங்களின் விபரம் குறித்து விதியாக உள்ளதா அல்லது விதிவிலக்காக உள்ளதா?*
10. *தரிசனத்தில் உள்ள ஏழு குத்துவிளக்குகள் எவற்றைக் குறிக்கின்றன?*
11. *நீங்கள் ஆராதிக்கும் சபைக்குழுமம் சிறியதாக இருந்தாலும், அது இன்னமும் இயேசுவுக்கு முக்கியமானதாக உள்ளதா?*
12. *இயேசுவின் கூற்றின்படி, ஏழு நட்சத்திரங்கள் குறிப்பது என்ன?*
13. *"தூதன்" என்ற வார்த்தையின் நேரடியான அர்த்தம் என்ன?*
14. *சபைகளின் நட்சத்திரங்கள்/தூதர்கள் என்பது பற்றிச் சாத்தியக் கூறுள்ள சில விளக்கங்களைக் கலந்துரையாடவும். இந்தப் பாடத்தின் படி, இயேசு தமது வலது கரத்தில் நட்சத்திரங்களை ஏந்தியுள்ளதன் கருத்து என்ன? இந்த அடையாளத்தைக் குறித்துச் சாத்தியக்கூறுள்ள மற்ற பயன்பாடுகளை நீங்கள் நினைத்துப் பார்க்க முடிகிறதா?*
15. *இந்தப் பாடத்தின்படி, தரிசனத்தின் முழுமையான வகையிலான நோக்கம் என்ன? இந்தத் தரிசனத்தில் உள்ளதாக நீங்கள் நினைக்கும் மற்ற செய்திகள் யாவை?*
16. *கர்த்தருடைய பிரசன்னத்திற்குள் நாம் வரும்போது, நாம் தவிர்க்க வேண்டிய இரண்டு அதிகமான முனைப்பகுதிகள் யாவை?*



*பத்மு தீவில் யோவான் (1:9)*




***குத்துவிளக்குகளின் மத்தியில் இயேசு நடந்து வருதல் பற்றிய தரிசனம் (1:12-16)***